**இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனம் - 2023**

------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் (''சம்மேளனம்'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கூற்று, திரண்ட நிதியங்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 21(அ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரககாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. 1.5 ஆம் பந்தியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புகள்)**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க பேணப்படுகின்ற கணக்காய்வு அபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இணக்கம் செய்யப்பப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் மற்றும் அறிக்கைகள்**

| உருப்படி | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா | தொடர்புரையட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத் தொகுதி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியவை | 987,449 | 3,176,663 | 2,189,214 | சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்கள் சரியானது ஆகும். எவ்வாறான போதிலும், இந்த ரூபா 2,189,214 தொகையானது விளையாட்டு திணைக்களத்தால் செலுத்தப்பட வேண்டியதாக காணப்பட்டது. | விளையாட்டுத் திணைக்களம் அல்லது இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சினால் ரூபா 2,189,214 ஆன தொகை செலுத்தப்பட வேண்டியுள்ளதாக சம்மேளனத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சினால் அவ்வாறானதொரு தொகை செலுத்த வேண்டியதாக காணப்படவில்லை என கணக்காய்வுக்கு தெரிவித்திருந்தது. அதனால், சம்மேயளத்தின் நிதிக்கூற்றுக்களில் இது திருத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாத எழுத்துமூலச் சான்றுகள்

| உருப்படி | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| கொடுப்பனவுகள் | 859,128 | பதின்மூன்று (13) கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் | போட்டித் தொடரின் கோவைகளும் உறுதிச்சீட்டுகள் இணைக்கப்பட்டமையால், அவற்றை சமர்ப்பிக்க முடியாதிருந்தது. | உறுதிச்சீட்டுகள் போட்டித் தொடரின் கோவைகளுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை. |
| செலவினங்கள் | 51,030,413 | உறுதிச்சீட்டுகள், சான்றுறுதிப்படுத்தல்கள் மற்றும் தொடர்புடைய பட்டியல்கள் | | |

### 1.6 செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய கணக்குகள்

#### 1.6.1. செலுத்த வேண்டியவை

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 டிசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டிய தொகைகளின் கூட்டுத்தொகை ரூபா 7,704,834 ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் முறையே ரூபா 50,000 மற்றும் ரூபா 3,074,823 தொகைகள் 2-5 வருடங்களுக்கு இடைப்பட்ட மற்றும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செலுத்தப்படாது காணப்பட்டன. மேலும், இந்த பொறுப்புகளை தீர்ப்பதற்கு உரிய கடப்பாடுகளை இனங்கண்டதன் பின்னர் நிதிக்கூற்றுக்களில் அவற்றைத் திருத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதேவேளை, இந்த தொகைகளுக்கான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தொகைகளை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு, நிலவும் கடப்பாடுகள் ஆராயப்பட்டு அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கத்தின் | | | |

| பிரமாணங்கள் | | | |
|---|---|---|---|
| III ஆம் பிரிவின் பிரமாண இலக்கம் (xi) | தற்போதைய சர்வதேச தரப்படுத்தலுடன் பத்து வருட காலப்பகுதிக்கான ஒருங்கிணைந்த திட்டம், குறித்த காலப்பகுதியில் எதிர்பார்த்த இலக்குகள் மற்றும் அதனை அதிகரிப்பதற்கான மூலோபாயத் திட்டம் ஆகியவை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கூட்டிணைந்த திட்டமொன்றை தயாரிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | செயலாற்றலை அதிகரிப்பதற்காக இலக்குகள் மற்றும் மூலோபாயங்கள் உள்ளடங்களாக 10 வருட காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டிற்கான சம்மேளனத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,170,986 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடு ஒத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 839,164 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 7,010,150 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக நேர் செலவினங்களின் ரூபா 56,746,583 ஆன அதிகரிப்பிற்கு எதிராக வருமானம் ரூபா 67,622,205 ஆல் அதிகரித்தமை இம் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 3.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்களின் பிரமாணங்களின் பகுதி III இன் பிரமாண இலக்கம் (xiii) இன் பிரகாரம், சான்றுபடுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் குழுவினால் ஒவ்வொரு நிதியாண்டும் நிறைவடைந்து இரண்டு மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், சம்மேளனத்தினால் 2023 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 04 மாத கால தாமதத்தின் பின்னர் 2024 யூலை 05 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | சம்மேளனத்தின் சான்றுபடுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2024 யூலை 05 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டன. | நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டும் நிறைவடைந்து இரண்டு மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |